# கலைஞானச்சுடர் – 2016

## விருது கைந்நூல்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

## பண்பாட்டுப் பெருவிழா

## 09.12.2016






நல்லூர்ப் பிரதேச செயலகம்

உ

# கலைஞானச் சுடர் - 2016

கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
நல்லூர்.


# 2016ஆம் அண்டுக்கான "கலைஞானச்சுடர்" விருதுக்குரியோர்



திரு.மூத்ததம்பி சிவலிங்கம்



திரு.கந்தையா குலசிங்கம்



திரு.சண்முகம் பஞ்சாட்சரம்



திரு.செல்லத்துரை வரதராஜன்



திரு.வயித்தி செல்லன் குமாரசுவாமி



திருமதி.அன்னலட்சுமி தனபாலசிங்கம்



திரு.சுப்பிரமணியம் பத்மநாதன்



திரு.கனகு அரியரத்தினம்



திரு.அண்ணாமலை செல்வரத்தினம்

# கலாசாரப் பேரவைக் கீதம்

நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவையை
நல்லெழிற் கலைஞரால் நலமுறப் பேணுவோம்!
கவின்கலை மிளிர்ந்திட, கற்பனை கனிந்திட,
புவிமிசை நிதமிவை புதியதாய்ப் பொலிந்திட,
கலைஞான மோங்கக் களம் அமைப்போம்!
கலைஞரைப் போற்றிக் கௌரவம் செய்வோம்! (நல்லூர்ப் பிரதேச)

இயலிசை நாடகமும் இதமிகு நாட்டியமும்
பயனுறு சுவடியும் புதைபொருள் ஆய்வும்
விந்தைமிகு சித்திரமும் விதந்தரு சிற்பங்களும்
சிந்தையில் தெளிவுறச் சேர்ந்தே உழைப்போம்!
அணிதிரள்வோம்! எங்கள் கலை வளர்க்க!
பணி புரிவோம்! எங்கள் இனம் சிறக்க! (நல்லூர்ப் பிரதேச)

அற்புதக் கலைஞரும் அன்புயர் ரசிகரும்
ஒற்றுமை ஓங்கிட ஓரணி நிற்போம்!
நற்றமிழ்க் கலைகளை நம்முயர் பண்பினை
வற்றாது போற்றியே வளம்பெற வைப்போம்!
எம்முயிராம் எங்கள் கலைகள் என்போம்!
நம் மனமகிழச் சுவையென நாம் படைப்போம் (நல்லூர்ப் பிரதேச)

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

ஆக்கம்
அமரர் "கலைஞானச்சுடர்"
தா.தேவமதுரம் அவர்கள்.

# நல்லூர்ப் பிரதேச கீதம்

வாழ்க புகழ்நிறை நல்லை எழிற்
பிரதேசமே வாழியவே!
மாண்பில் உயர்ந்து வளம் பல பெற்றென்றும்
வாழ்க சிறப்புடனே! (வாழ்க)

ஆன்மிக ஊற்றில் தினம் வளர்ந் தோங்கிடும்
ஆத்ம பலத்துடனே ...
அன்னைத் தமிழ்மொழி வெல்ல உழைப்பவர்
அன்பின் துணையுடனே
நீண்ட பண்பாட்டின் நிழல்தனில் எம்
அடையாளங்கள் காத்திடவே
இங்குள சைவ, கிறிஸ்தவ மார்க்கத்தால்
நீதி செழித்திடவே (வாழ்க)

ஆழ்ந்த கலை மலர்ந்தாடிடக் கல்வியில்
அறிவியலிற் செழித்தே
ஆற்றல் தரும் விளையாட்டு, தொழில்களில்
அதிசயம் செய்துயர்ந்தே
சூழ்ந்த வயல், கடல், தோட்டம் தனில் தினம்
அபிவிருத்தி தொடர்ந்தே
சொர்க்கம் இம் மண்ணெனச் சொல்லி நிமிர்ந்து எம்
சூழலைக் காப்பமின்றே! (வாழ்க)

அற்புத ஞானியர், சித்தர், துறவிகள்
ஆடி அமைந்த நிலம்
முத்தமிழ்க் காவலர், கற்றவர், வீரரின்
மூச்சு நிறைந்த இடம்
எத்தனை கோவில்கள், கல்வியின் சாலைகள்
இன்றுஞ் செழிக்குந் தலம்
இங்குள மாந்தர்க்கு சேவை செய்வோம் இது
எமக்குக் கிடைத்த வரம். (வாழ்க)

ஆக்கம்
கவிஞர் த.ஜெயசீலன்

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுச் செயலாளரின் ஆசிச்செய்தி



நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழா - 2016 இல் வெளியிடப்பட்டுள்ள "கலைஞானச்சுடர்" விருது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ள பண்பாட்டு விழாவில் கௌரவிக்கப்படவுள்ள 09 கலைஞர்களதும் சேவை விபரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு இம்மலர் வெளியிடப்படுகின்றது.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றுப் பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். அந்த வகையில் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் பண்பாட்டு விழா சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.
24.11.2016

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் பிரதேச பண்பாட்டு விழா 2016 இல் "கலைஞானச்சுடர் மலர்" வெளியீடு செய்யப்படும் இவ்வேளை, இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

நல்லூர், யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த வரலாற்றுத் தொடர்புடைய முருகன் ஆலயத்தைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசம் சமயம், கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடன் மிகப்பெரும் தொடர்புகளைக் கொண்ட பிரதேசம் எனக் கூறுவதில் தவறில்லை. வரலாற்றுக்கால சங்கிலிய மன்னனின் இராசதானியாக விளங்கிய பகுதியாகவும் அறியப்படும் பிரதேசமாகும். இப் பிரதேசத்தில் வாழ்ந்த கலைஞர்களின் சிறப்புக்களையும் அவர்கள் கலைத்தாய்க்கு ஆற்றிய பணியினையும் பார் அறியச் செய்யும் பெருநோக்கோடு இக் "கலைஞானச்சுடர்" மலரினை உருவாக்கியிருக்கின்றார்கள். இவ் அரிய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டிய தேவை உள்ளது. எமது சமூகத்தின் இருப்புக்கும் அறிவுசார் தேடலுக்கும், இன்னும் கலைஞர்களாக வர இருக்கும் அறிஞர்களின் கலைத்தேடலுக்கும், இக் கலைஞானச் சுடர் அருமருந்தாக அமையும்.

இக்"கலைஞானச்சுடர்" மலர் சுடர்விட்டுப் பிரகாசிக்க நெய்யூற்றி உழைத்த மலர்க்குழு மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரை வாழ்த்தி, என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



# பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்ப் பிரதேச செயலகத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் பண்பாட்டுப் பெருவிழா இவ் வருடமும் சிறப்பாக நடைபெறுவதற்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு தனி மனிதனும் தான் எந்தவொரு வகையிலாவது தான் வாழும் பிரதேசத்தில் தன்னை அடையாளப்படுத்தி, தனது சிறப்புக்களை வெளிக்கொணரல் வேண்டும் என்ற ஆர்வத்தினைக் கொண்டிருப்பான். இது ஒவ்வொரு மனிதனதும் தனியியல்பாகும். அந்த வகையில் கலைஞர் என்ற ரீதியில் தன்னை முன் நிறுத்துவதற்கு இக் கௌரவிப்பு ஏணிப்படியாக அமையும் என்றால் மிகையாகாது. ஏனெனில் இலைமறைகாயாக மறைந்திருக்கும் ஒவ்வொரு மனிதனதும் சிறப்பியல்புகள் வெளியுலகிற்கு கொண்டுவரல் வேண்டும். இவ்வாறாக பிரதேச ரீதியான கலைஞர்களைக் கௌரவிப்பதன் ஊடாகத் தமது திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கும் போது மேலும் தாம் சாதிக்க வேண்டும் என்ற மனநிலையினைத் தோற்றுவிக்கின்றது. அத்துடன் அக்கலைஞர்களின் சேவை பற்றிய விபரங்களைக் கையேடாக வெளியிடுவதன் மூலம் அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கின்றது. ஒவ்வொரு கலைஞரும் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையினால் திறமைகள் மழுங்கிப் போவதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அவ்வாறான நிலமைகளைச் சீர்செய்வதற்கு இக் கௌரவிப்பு ஓர் அடிப்படையாக அமையும்.

அந்தவகையில் இவ்வருடமும் நல்லூர்ப்பிரதேச பண்பாட்டு விழாவில் கௌரவம் பெறும் 09 கலைஞர்களுக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துகொள்கின்றேன். அத்துடன் இவ்வாறான ஓர் தொகுப்பினை ஆவணப்படுத்திய பிரதேச செயலாளர் மற்றும் விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

திருமதி.வனஜா செல்வரட்ணம்
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



# நல்லூர்ப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்ப் பிரதேச செயலகம், நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபை ஆகியவற்றால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் பண்பாட்டு விழாவில் பிரதேசக் கலைஞர்களை, அவர்கள் ஆற்றிய கலைச்சேவையைப் பாராட்டி "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. அவ்வகையில் இவ்வருடமும் பலவகைப்பட்ட கலைத்துறைகளில் பணியாற்றிய கலைஞர்களை அவர்கள் கலைத்துறையின் வளர்ச்சிக்கு வழங்கிய சேவையை மூப்பின் அடிப்படையில் கௌரவிக்குமுகமாக 09 கலைத்துறைக்குமாக 09 கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிரதேசத்துக்கும், மாவட்டத்துக்கும், அதற்கு அப்பாலும் தங்களது ஆளுமையான பணிகளை நிறைவேற்றியுள்ளனர். எனவே இக்கலைஞர்களின் கலைவரலாறு சிறுகுறிப்பாக "கலைஞானச்சுடர்" கைந்நூலில் ஆவணப்படுத்தப்படுதல் காலத்தின் தேவையாகும்.

இன்றைய காலகட்டத்தில் எமது பாரம்பரியக் கலைகளின் சிறப்புக்களை, அவைகள் செழிப்புற்று இருந்தமையை, இவர்கள் வரலாறு எதிர்கால சந்ததியினருக்கு எடுத்தியம்பும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே அவர்கள் பணி தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, இவ் வருடம் எமது பிரதேசத்தின் கலைஞானச்சுடர் விருது பெறும் நவநாயகர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
பிரதேச செயலாளரும்
கலாசாரப் பேரவைத் தலைவரும்
கலாசார அதிகாரசபைத் தலைவரும்
நல்லூர்.

# கலைஞானச்சுடர் விருது -2016



மனிதனின் மாண்புகளை வளர்ப்பதில் எமது கலை, இலக்கியங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. எவ்வாறு உழுதல் மண்ணை பண்படுத்துகின்றதோ, அவ்வாறு கலைகள் மனிதனைப் பண்படுத்துகின்றன என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் மக்களைப் பண்புள்ளவர்களாக வளர்ப்பதற்கு உரமாக விளங்கும் கலைஞர்கள் சமூகத்தில் மதிக்கப்படவேண்டியவர்கள்.

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் அண்ணளவாக 325 கலைஞர்கள் உள்ளனர் என்பதை கலைஞர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டதன் அடிப்படையில் கூறமுடியும். 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவை இன்று 16ஆவது அகவையில் ஏற்கனவே 84 கலைஞர்களுக்கு "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இவ்வருடம் எழுத்துத்துறை, நாடகம், இசைநாடகம், கர்நாடக இசை, மிருதங்கம், ஆர்மோனியம், சிற்பம், ஓவியம் என 09 கலைஞர்களுக்கு கலைஞானச்சுடர் விருது வழங்கப்படுகின்றது. இக்கலைஞர்கள் ஆற்றிய கலைப்பணிகள், பெற்ற கௌரவங்கள் வரலாற்றுக் குறிப்பாக "கலைஞானச்சுடர்" கைந்நூலில் ஆவணமாகப் பதியப்படுகின்றது. இவ்வருடம் 06 வது மலராக இக்கைந்நூல் மலர்கின்றது.

இப்பணிக்கு நிதிஅனுசரணையும் ஊக்கமும் அளித்து வரும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர், கலாசாரப் பேரவை, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் விருது பெறும் கலைஞர்களின் கலைவாழ்வு மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

கு. ரஜனி
கலாசார உத்தியோகத்தர்
செயலாளர்-கலாசாரப் பேரவை

**திரு.மூத்ததம்பி சிவலிங்கம்**
**எழுத்தாளர்**
**1933.12.02**

கோண்டாவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த இக்கலைஞர் இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையினதும் உரும்பிராய் இந்துக்கல்லூரியினதும் பழைய மாணவர் ஆவார் . சமய, சமூகப்பணியில் ஆர்வமுடையவர். 31 வருடகாலம் கிராம அலுவலராகப் பணியாற்றி ஓய்வுநிலை பெற்றவர்.

ஓய்வு காலத்தில் இணுவில் சைவத்திருநெறிக்கழகம் இயங்கவும், இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையை ஆரம்பிக்கவும் முன்வந்தார். இதே அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியராக 1997 முதல் இதுவரை பணியாற்றுகிறார். இப்பாடசாலையின் வளர்ச்சி கருதிச் சமயஇலக்கிய நூல்கள் எழுதும் பணியை 2003இல் ஆரம்பித்தார். இவரால் எழுதப்பெற்ற 21 நூல்களுள் இதுவரை 19 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது "நல்லூர் கந்தசுவாமி கோயில்" என்னும் நூலை ஆலய அறங்காவலர், தாமே வெளியிட முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 21ஆம் நூலான "வித்தக விநாயகர்" என்னும் நூல் 01.01.2017 இல் வெளிவர உள்ளது. இவரின் எழுத்துப்பணித் தொடரில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் மாதாந்த சஞ்சிகையான "ஞானச்சுடரில்" கடந்த 12 வருடங்களாக இவரின் கட்டுரைகள் வெளிவந்ததுடன், நான்கு முறை விருதுகள் இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர். யாழ்.மாநகரசபை வெளியிடும் "நல்லைக்குமரன் மலரில்" கடந்த பத்து வருடங்களாக இவரின் கட்டுரைகள் தொடர்ந்து வருகின்றன. இவரின் சமய இலக்கியப் பணியை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், பேராசிரியர் சபா ஜெயராசா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் போன்ற பல பெரியார்கள் நல்லாசி கூறி உற்சாகப்படுத்தியுள்ளனர்.

பெற்ற பட்டங்கள்:- 2012 இல் வலிதெற்கு பிரதேச செயலகம் வழங்கிய "ஞானஏந்தல்" விருது, 2012 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய அரச விருதான "கலாபூஷணம்".

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

**திரு.கந்தையா குலசிங்கம்**
**ஊடகத்துறை**
**1940.12.16**

கல்வியங்காடு, புலவனார் வீதி முகவரியில் வசிக்கும் என்.கே.குலசிங்கம் என அழைக்கப்படும் இக்கலைஞர் ஊடகத்துறையில் 35 வருட காலத்தை நிறைவு செய்துள்ளார். ஈழமுரசு, முரசொலி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பல வருடங்கள் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார். சிரித்திரன், ராதா போன்ற சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. இவரால் எழுதப்பட்ட யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களின் கட்டுரைத் தொகுப்பு 2016 ஆம் ஆண்டு "நிழல்" எனும் பெயரில் வெளியிடப்பட்டது.

இவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதிவானாவார். சமூக சேவை ஆர்வலராக சமூகக் கட்டமைப்புக்களின் மேம்பாட்டிற்காக காத்திரமான பங்களிப்புச் செய்தமைக்காக இவரைப் பாராட்டி "சமூக சேவை ஆர்வலர்" என்னும் பட்டத்தை கைதடி அரச முதியோர் இல்லம் வழங்கியது.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடகப் பயிற்சிமையத்தில் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டமைக்காக சுவீடன் நாட்டைச் சேர்ந்த வில்லி ஒலிவர் என்பவராலும் மற்றும் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானகுமாரன், ஊடகப் பயிற்சி மையப் பணிப்பாளர் தே.தேவானந்த் ஆகியோராலும் ஊடகத்துறைக்கான சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவருக்கு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினாலும் சான்றிதழ் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் டாக்டர் டீபிகா உடகமவினால் சான்றிதழ் வழங்கப்பட்டதோடு, இலங்கை சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரட்ணாவினால் "தேசோதய தீபம்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.சண்முகம் பஞ்சாட்சரம்
## இசை நாடகம்
**1943.07.15**

அரியாலையூரைச் சேர்ந்த இக்கலைஞர் அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவின் ஆரம்பகால அங்கத்தவர்களில் ஒருவராவார். இசைநாடகத்துறை மற்றும் இசைத்துறைகளில் இவரின் பங்கு அளப்பரியதாகும். இசைநாடகத்துறையில் பாடி நடிப்பதில் இவரின் ஆற்றல் வியக்கத்தக்கது. ஸ்ரீகலைமகள் நாடகசபாவினூடாகப் பல நாடகங்களில் நடித்துள்ளார். ஸ்ரீவள்ளி, அரிச்சந்திரா மயானகாண்டம், சத்தியவான் சாவித்திரி, பாமாவிஜயம் போன்ற நாடகங்களில் நடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

சிறந்த குரல்வளம் மிக்க இவர் பல அரங்குகளில் தெய்வீகப் பாடல்கள் மற்றும் பழைய பாடல்களைப் பாடி பலரையும் மகிழ்வித்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக அரியாலையின் பிரபல்யமான விஷக்கடி வைத்தியராகத் திகழ்கின்றார். ஆற்றல் நிறைந்த கலைஞராகிய இவரின் கலைத்துறைப் பணியைக் கௌரவித்து ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையம் 2013 இல் "கலைச் சிகரம்" என்ற பட்டத்தை வழங்கியது. 2008 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாமேடு மேட்டுத்தெரு அருள்மிகு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மாள் தேவஸ்தானம் "பக்தி இசைத்திலகம்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 2015 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் அரியாலையூர் ஐரோப்பிய உறவுகள் "முத்தமிழ் வாரிதி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். 2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய அரச விருதான "கலாபூஷணம்" விருது இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.செல்லத்துரை வரதராஜன்
## ஓவியம்
## 1946.08.23

கொக்குவில் கிழக்கு, நாமகள் வீதி முகவரியில் வசிக்கும் இவ்வோவியர் 1972 ஆம் ஆண்டிலிருந்து பல பாடசாலைகளில் சித்திர ஆசிரியராகப் பணிபுரிந்து பின்பு யாழ்.கல்வி வலயத்தில் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகராகவிருந்து ஓய்வு பெற்றவராவார். இவர் இலங்கை அரசினர் நுண்கலைக் கல்லூரி மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் 61 பாடசாலைகளுக்கு ஓவியம் வரைந்து கொடுத்துள்ளார். பத்துக்கு மேற்பட்ட ஆலயங்களில் இவர் ஓவியங்கள் வரைந்துள்ளார். இவரது ஓவியங்கள் உயிரோட்டமானதாக புராண, இதிகாச மற்றும் சமய சரித்திர நிகழ்வுகளை வெளிப்படுத்து பவையாக உள்ளன. மேலும் சிற்பக்கலையிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். வள்ளுவர் சிலை, சரஸ்வதி சிலை, இராமநாதக்குருக்களின் சிலை என்பன இவரால் வடிவமைக்கப்பட்டவையாகும். இக்கலைஞர் தனது மகனையும் தன் வழியில் ஒரு சிறந்த ஓவியராக உருவாக்கி தற்பொழுது அவர் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் விரிவுரையாளராக இருப்பது குறிப்பிடத்தக்கது. 1965இல் யப்பானில் நடைபெற்ற சர்வதேசக் கண்காட்சியில் பங்குபற்றிய இவரது சித்திரங்களுக்கு தங்கப்பதக்கமும் வர்ண சாதனங்களும் வழங்கப்பட்டன.

பெற்ற பட்டங்கள்:- யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பொன்விழாவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் "ஓவியமணி" எனும் பட்டமும், 1997ஆம் ஆண்டு யா/சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் "ஓவிய கேசரி" எனும் பட்டமும் வழங்கப்பட்டது. வலிகாமம் தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் "ஞான ஏந்தல்" விருதும் 2007 இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷண விருதும் வழங்கப்பட்டன.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.வயித்தி செல்லன் குமாரசுவாமி
## நாடகம்
## 1949.05.07

கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதி முகவரியில் வசிக்கும் இக்கலைஞர் சிறு வயதிலிருந்தே ஸ்ரீ வாகீஸ்வரி நாடகமன்றத்தில் ஒரு நடிகனாக இருந்துள்ளார். இவர் நடித்த முதல் நாடகம் "சாம்பிராட் அசோகன்" என்னும் சரித்திர நாடகம் ஆகும். பின்பு கலையரசன் ஆ.ஜீவாவின் "அலாவுதீன்" என்னும் சரித்திர நாடகத்திலும் மற்றும் "தியாகத்தீ" என்னும் சமூக நாடகத்திலும் நடித்துள்ளார். இவர் கதைவசனம் எழுதி, நடித்து, நெறியாள்கை செய்த "துருவ சங்கமம்" என்னும் வீடியோப்பட வெளியீட்டு விழா சங்கானை உதவி அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் 1985ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்விழாவை நடிகமணி V.V.வைரமுத்து தொடக்கி வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்று இலங்கை வானொலி நாடக நடிகர் ஜீவா நாவுக்கரசனால் மேடையேற்றப்பட்ட "தவறுகள் உறவுகள்" எனும் நாடகத்திலும் இதே கதாசிரியரால் உருவான வீடியோ குறும்படமான "பயணங்கள் தொடர்கின்றன" என்பதிலும் நடித்துள்ளதை குறிப்பிட்டு பேராசிரியர் கே.தேவராசா அவர்கள் பாராட்டியுள்ளார். மேலும் சாயி பக்தரான இக்கலைஞர் தாவடி சத்தியசாயி சேவா நிலையத் தலைவராக 2011-2013 காலப்பகுதியில் சிறப்பாகப் பணியாற்றியமைக்கும் பாராட்டியுள்ளார். ஜீவா கதாசிரியரால் தயாரிக்கப்பட்ட வீடியோத் திரைப்படமான "சுதந்திர தாகத்தில்" பாதிரியார் வேடமிட்டு நடித்துள்ளார்.

மேலும் இலங்கை - இந்தியக் கூட்டுத் தயாரிப்பான நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் "பைலட் பிரேம்நாத்" திரைப்படத்திலும், இலங்கை இந்திய கலைஞர்கள் சேர்ந்து நடித்த "இரத்தத்தின் இரத்தமே" திரைப்படத்திலும் வேடமேற்று பங்களிப்புச் செய்துள்ளார். அவற்றைவிட தற்பொழுது குறும்திரைப்படங்களைத் தயாரிப்பதிலும் நடிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்

## திருமதி.அன்னலட்சுமி தனபாலசிங்கம்
## கர்நாடக இசை
1951.04.09

கந்தர்மடத்தில் வசித்து வரும் இக்கலைஞர் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று சங்கீத டிப்ளோமா, இசைக்கலைமணி மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய தொழிற்தகைமைகளைப் பெற்று 1982 ஆம் ஆண்டு சங்கீத ஆசிரியராகப் பணியேற்றார். அதனைத் தொடர்ந்து 26 வருடங்கள் இசைத்துறையில் சேவையாற்றி உதவிக் கல்விப் பணிப்பாளராக (அழகியல்) பதவியுயர்வு பெற்று 2011இல் ஓய்வுநிலை பெற்றார். அமரர் ம.அருளானந்தம் (புல்லாங்குழல்) அவர்களால் திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்ட "மும்மூர்த்திகள் இசைமன்றில்" சங்கீதம் கற்கத் தொடங்கியதன் மூலம் இசைத்துறையினுள் பிரவேசித்தார். தொடர்ந்து இசைப்புலவர் என்.சண்முகரத்தினம் அவர்களால் 1976 இல் ஆரம்பிக்கப்பட்ட இசை நுண்கலைப் பீடத்தின் முதல் மாணவி என்ற பெருமையும் பெற்றார். பாடசாலைச் சேவையுடன் திருமறைக் கலாமன்றத்தின் கவின்கலைகள் பயிலகத்தில் மாணவர்களுக்கு இசைப்பயிற்சியும் வழங்கியுள்ளார். திருமறைக் கலாமன்றத்தின் நிகழ்வுகளில் இசைக் கச்சேரிகள் செய்துள்ளார். இசைத்துறை சார்ந்த கட்டுரைகள் எழுதுதல், கருத்தரங்குகள் நடாத்துதல் போன்ற செயற்பாடுகளினூடாக மாணவர்களையும் ஆசிரியர்களையும் வழிப்படுத்தியுள்ளார். பாடசாலைக் கீதம், கல்லூரிக் கீதம் ஆகியனவற்றை எழுதி இசையமைத்து ஒலிப்பதிவு செய்துள்ளார்.

பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகத்தில் அங்கத்தவராகயிருந்து அக்கழகத்தினால் ஆற்றுகைப்படுத்தப்படும் கூத்துப்பாடல்களின் பின்னணிப் பாடகராகத் திகழ்ந்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி கூட்டுத் தாபனம் ஆகியவற்றில் பாரம்பரிய நாடகங்களுக்குப் பின்னணிப் பாடகராக இருந்துள்ளார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.சுப்பிரமணியம் பத்மநாதன்
## சிற்பம்
## 1953.03.04

வண்ணார்பண்ணையில் வசிக்கும் இக்கலைஞர் கடந்த 25 வருடங்களாக சிற்பத்துறையில் பணியாற்றி வருகின்றார். இவர் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். சிற்பம், சித்திரம் என்பனவற்றை தனியார் நிறுவனங்களிலும் வீட்டிலும் போதித்து வருகின்றார். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் வளவாளராக சிற்பம், சித்திரத்துறையில் பணியாற்றியுள்ளார். சுவரில் உயர்புடைப்புச் சிற்பங்கள் அமைப்பதிலும் மற்றும் சிலைகள் செய்வதிலும் ஆற்றல் மிக்கவர். 2014ஆம் ஆண்டு மதி கலர் பதிப்பகத்தின் முன்புற வாயிலில் 5 அடி பிள்ளையார் சிலை அமைத்துக் கொடுத்துள்ளார். பண்டத்தரிப்பு முன்பள்ளிப் பாடசாலைக்கு 8 அடி உயரமான சரஸ்வதி சிலை சீமெந்தினால் செய்து கொடுத்துள்ளார். இது வடமாகாணக் கல்வியமைச்சர் கௌரவ த.குருகுலராசா அவர்களினால் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று பல இடங்களில் தெய்வச் சிலைகளைக் கலையம்சத்துடன் அமைப்பதிலும், பெரியவர்களின் சிலைகளை உயிரோட்டமாக அமைப்பதிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். சிற்பத்துறையில் இவர் ஆற்றிய சேவைக்குப் பல பட்டங்களும் கௌரவிப்புக்களும் இவருக்குக் கிடைத்துள்ளன. இலங்கை உலக சைவத் திருச்சபை 2016 ஆம் ஆண்டு "சிற்பக் கலா வித்தகர்" என்ற பட்டத்தையும், சமய, சமூக, கலைத்துறை சார்ந்த பணிக்காக யாழ். இந்து சமயப் பேரவை "கலா வித்தகர்" பட்டத்தையும், காவேரி கலாமன்றத்தினால் "சமூகக் காவலர்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சித்திரத்துறையிலும் பாராட்டப்படக் கூடியளவிற்கு பங்களிப்பாற்றிய இவருக்கு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் வர்ணந் தீட்டியமைக்காக 1998 ஆம் ஆண்டு அக்கோயிலின் கும்பாபிஷேக நிகழ்வின்போது "ஓவியக் கலாகேசரி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.கனகு அரியரத்தினம்
## ஆர்மோனியம்
## 1953.09.16

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் இக்கலைஞர் ஆர்மோனியம் வாசிக்கும் கலையில் பெயர் பெற்றவர். தனது சொந்த முயற்சியாலும் ஆர்வத்தினாலும் இக்கலையில் திறமையினைப் பெற்றார். தனது உறவினரின் உதவியுடனும் அக்காலத்தில் பிரபல்யமான ஆர்மோனியக் கலைஞர் ஜோன்கவாஸ் என்பவரின் உதவியுடனும் இக்கலையின் நுட்பங்களை அறிந்து பிற்காலத்தில் பிரபல்யமானார். இசை, நாடகம், காவடி, பஜனை, நாட்டுக்கூத்து, வில்லிசை ஆகியவற்றிற்குப் பின்னணியாக வாசித்து வருகின்றார். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வன்னி, திருக்கோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலும் தனது கச்சேரிகளை நடாத்தியுள்ளார். தனது கிராமத்திலுள்ள நாடக மன்றங்களின் நிகழ்வுகளுக்கு ஆர்மோனியம் வாசித்துச் சேவையாற்றியுள்ளார். ஆர்மோனியக் கலையைப் பயில்பவர்கள் இல்லை என்றே கூறுமளவுக்கு இப்பாரம்பரியக் கலை அருகி வருவதையிட்டு இக்கலைஞர் தனது ஆதங்கத்தை பத்திரிகைப் பேட்டியில் வெளிப்படுத்தியிருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இக் கலையில் ஈடுபட்டுவரும் இவருக்கு அண்மையில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் "சாமஸ்ரீ விஸ்வ கலாஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

## திரு.அண்ணாமலை செல்வரத்தினம்
## மிருதங்கம்
## 1954.08.09

கந்தர்மடம் தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவாகிய பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் இக்கலைஞர் சிறு வயதிலிருந்து வாய்ப்பாட்டு, மிருதங்கம் ஆகியவற்றைக் கற்று, பின்பு யாழ் பல்கலைக்கழகத்தில் இசைக் கலைமணி (மிருதங்கம்) பட்டத்தைப் பெற்றார். வடஇலங்கை சங்கீத சபையின் மிருதங்க கலாவித்தகர் பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இந்திய கேரள கலாமண்டல அரச நுண்கலை நிறுவனத்தில் கதகளி வாத்தியமான செண்டையில் விசேட பயிற்சியும் பெற்றுள்ளார். கலைத்துறையில் சிறந்த தராதரங்களைக் கொண்ட இவர் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த வாத்திய மற்றும் வாய்ப்பாட்டு கலைஞர்களுக்கு மிருதங்கம். கடம், கெஞ்சிரா ஆகிய தாள வாத்தியங்களை வாசித்து வருவதோடு நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு மிருதங்கமும் கதகளி நடனத்திற்கு செண்டை வாத்தியமும் வாசித்துள்ளார். அத்துடன் கடந்த 40 வருடங்களாக மிருதங்க பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்தும் வருகின்றார். யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் மிருதங்க ஆசிரியராகக் கடமைபுரிந்ததுடன் அம்மன்றத்தினால் தயாரித்து மேடையேற்றப்பட்ட "கூத்துப்பண் நடம்", "அந்தமான்" போன்ற சில நடன நாடகங்களிற்கு செண்டை இசைக்கருவியை வாசித்து அவற்றின் சிறப்புக்கு அணிசேர்த்தவர். பிரபல்யமான நடன ஆசான் வேல் ஆனந்தன் நாட்டியக்குழுவில் பல்லாண்டுகாலம் பணியாற்றிய இவரை ஈழத்தமிழர் மத்தியில் பழக்கப்படுத்தப்பட்ட கொட்டு வாத்தியங்களுக்கு அப்பால் சேரநாட்டு (கேரள) வாத்தியங்களான செண்டை, சுத்தமத்தளம் ஆகியவற்றை அறிமுகப்படுத்திக் கையாண்ட சாதனைக் குரியவர் என புகழப்பட்டவர்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச பண்பாட்டு விழாவில் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றோம்.

# நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நிர்வாக சபை - 2016



இ.வ.இருப்பவர்கள் : திருமதி.கு.ரஜனி, திருமதி.கி.அருட்செல்வி, திரு.வை.சந்திரசேகரம், திரு.நா.தவராசா, திரு.ஆழ்வாப்பிள்ளை சிறி (பிரதேச செயலாளர்), பேராசிரியர் செ.கிருஷ்ணராசா, திரு.செ.சண்முகலிங்கம், கலாநிதி.மனோன்மணி சண்முகதாஸ், செல்வி.மலர் சின்னையா

இ.வ.நிற்பவர்கள் : திரு.எஸ்.நிமலன், திரு.ந.சற்குருநாதன், திரு.சோ.ஜெயந்திரன், திரு.வி.விஜயரட்சகன், திரு.ஜெ.தர்மராசா, திரு.வே.தூயகுமாரன், திரு.பு.தஜிதரன், திரு.வி.சிவஞானசேகரம்,

படத்தில் இல்லாதவர்கள் : திரு.தெ.விஜயசங்கர், திரு.எஸ்.துரைராசா, திரு.சு.சிவராசா

# பண்பாட்டுப் பெருவிழா 2015 - கலைஞர் கௌரவிப்பு





Sivaranjanam. 077 3068982